வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 27.09.2025 சனிக்கிழமை இதழ் : 270 பக்கங்கள் : 08

# எந்தவோர் அழுத்தத்துக்கும் அடிபணிய தயாராக இல்லை!

## அமெரிக்காவில் கூறினார் ஜனாதிபதி அநுர

நியூயோர்க், செப்ரெம்பர் 27

**நாட்டு மக்களின் அபிலாஷைகள் மற்றும் நம்பிக்கைகளுடன் மட்டுமே தான் கட்டுப்பட்டிருப்பதாகவும், ஒரு வருடத்துக்கு முன்னர் இந்த அரசை தெரிவுசெய்து மக்கள் வைத்துள்ள அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் எந்தவோர் அழுத்தத்துக்கும் அடிபணியத் தயாராக இல்லை என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.**



நாடு எதிர்கொள்ளும் அடுத்த சவால், அடைந்த பொருளாதார வெற்றிகள் நாட்டு மக்களைச் செல்வதை உறுதி செய்வதாகும் என்றும், இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் அந்த நோக்கத்தை மனதில் கொண்டு தயாரிக்கப் படுகிறது என்றும் ஜனாதிபதி கூறினார்.

அமெரிக்க நேரப்படி நேற்று முன் தினம் பிற்பகல் நியூயோர்க்கில் உள்ள ஸ்டெடன் ஐலண்ட் கலைக் கூடத்தில் நடைபெற்ற அமெரிக்காவில் வசிக்கும் இலங்கை

07



படம் : ஐ.சிவசாந்தன்

## தியாக தீபம் திலீபனுக்கு நேற்று நல்லூரில் உணர்வுபூர்வ அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 27

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 38 ஆவது நினைவு தினம், நேற்று யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு, மாவீரரரின் தாயொருவர் பொதுச்சுடர் ஏற்றினார்.

07

## பிறந்து நான்கு மாதங்கள் நிரம்பிய பெண் குழந்தை யாழில் உயிரிழப்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், செப். 27

யாழில் பிறந்து நான்கு மாதங்களேயான பெண் குழந்தை ஒன்று நேற்று உயிரிழந்துள்ளது. உடுவில் கிழக்கு, சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த சஜித்தீபன் கிஷாரா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தைக்கு கடந்த 24ஆம் திகதி நான்கு மாதங்களில் ஏற்றப்படும் தடுப்பூசி ஏற்றப்பட்டது. ஊசி ஏற்றப்பட்ட பின்னர் குழந்தையின் உடல்நிலையில் மாற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் குழந்தையை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். வைத்தியசாலைக்கு

07



## யாழ்.பல்கலைக்கழகத்தில் திலீபனின் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், செப். 27


ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 38 ஆவது நினைவு தினம் நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

மதியம் 12.00 மணிக்கு நினைவேந்தல் ஆரம்பமானதுடன், பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

திலீபனின் உருவப் படத்துக்கு பல்கலைக்கழக சமூகத்தினால் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது, பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். (அ)

## இராணுவத் தளபதியின் நிகழ்வில் ஊடகங்களுக்கு அனுமதி மறுப்பு!



- குமார கோகுலன் -

வவுனியா, செப். 27

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்றிக்கோ வவுனியா கந்தசுவாமி ஆலயத்துக்கு நேற்று விஜயம் செய்திருந்த நிலையில் அது தொடர்பாக செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இலங்கை இராணுவத்தின் 76 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆசீர்வாதம் பெற ஏற்பாடு செய்யப்பட்ட மத அனுஷ்டான நிகழ்வுகள்

07

## உயிரிழந்த இரட்டைக் குழந்தைகளின் இளம் தாயாரும் நேற்று மரணமானார்!

யாழ்ப்பாணம், செப். 27

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரட்டைக் குழந்தைகளை பிரசவித்த தாயாரும் நேற்று உயிரிழந்துள்ளார். ஆனைக்கோட்டை - சோமசுந்தரம் வீதியை சேர்ந்த நிமலராஜூ சாருமதி (வயது 28) என்ற தாயாரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த தாயார் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறுவைச் சிகிச்சை மூலம் ஒரு ஆண் குழந்தையையும் பெண் குழந்தையையும் பிரசவித்தார். இதன்போது ஒரு குழந்தை உயிரிழந்து பிறந்ததுடன் மற்றைய குழந்தை பிறந்து 45 நிமிடங்களில் உயிரிழந்தது.

இந்நிலையில் தாயார் தொடர்ச்சியாக மயக்கத்தில் இருந்ததால் சிகிச்சையளிக்கப்பட்டு

07

## இலங்கை அரசின் புதிய பொருளாதார சீர்திருத்தங்களுக்கு ஐ.நா. முழு ஆதரவு

### அநுரவிடம் கூறினார் செயலாளர் நாயகம்

நியூயோர்க், செப். 27

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க்குக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஐ.நா. பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டெரெஸ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் இந்த சந்திப்பு

07



## ஜப்பான் சென்றார் அநுர!

கொழும்பு, செப். 27

அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அமெரிக்க விஜயத்தை நிறைவு செய்த நிலையில், ஜப்பானுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக,

07

## மண்டைதீவுக் கடலில் மூழ்கி 17 வயது இளைஞன் மரணம்!

யாழ்ப்பாணம், செப். 27

யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். ஆனைக்கோட்டை - சாவல்கட்டுப் பகுதியைச் சேர்ந்த சிவரத்தினம் சந்தோஷ் (வயது 17) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் நேற்று அதிகாலை 3.30 மணிக்கு கடற்றொழிலுக்காக சித்தப்பாவுடன் காக்கைதீவு கடற்பகுதியூடாக மண்டைதீவு கடலுக்கு சென்றுள்ளார்.

களங்கண்டி முறையிலான மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது குறித்த இளைஞனை காணாததால் அவரது சித்தப்பா கடலில் தேடுதலில்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# நல்லூரில் நடைபெற்ற தியாக தீபம் திலீபனின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல்









படங்கள் : ஐ.சிவசாந்தன்

# வேலணை பொது நினைவிடத்தில் தியாகதீபம் திலீபன் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், செப். 27

தியாக தீபம் திலீபனின் 38ஆவது நினைவு தின இறுதி நாளான நேற்று தீவக நினைவேந்தல் குழுவினரால் வேலணை வங்களாவடி பொது நினைவிடத்தில் நினைவு கூர்ந்து அனுஷ்டிக்கப்பட்டது.

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாநோன்பிருந்து தனது உயிரை துறந்த தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு இறுதி நாள் நினைவு நிகழ்வு நேற்றாகும்.

இந்த நினைவேந்தல் தமிழ் மக்கள் வாழும்மிடம் தோறும் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நினைவு வேலணை வங்களாவடி பொது நினைவுத் தூபியில் அனுஷ்டிக்கப்பட்டது.

அத்தோடு தியாகி திலீபனின் இறுதி நாள் நிகழ்வுகளின் ஓர் அங்கமாக வங்களாவடியில் உள்ள பொது நினைவுத் தூபியில் காலை 8 .30 மணிமுதல் அடையாள உண்ணாவிரதத்துடன் வேலணை மக்களால் நினைவேந்தப்பட்டது.

இந்த நிகழ்வு மூந்து மவீரர்களின் தாயாரால் பொது ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.

தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு முன்னாள் போராளியால் மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து வேலணை பிரதேச சபையின் தவிசாளர் மலர் தூவி அஞ்சலித்தார்.

அதனைத் தொடர்ந்து யாழ்.மாநகர சபை முன்னாள் முதல்வர் மணிவண்ணன், முன்னாள் உறுப்பினர் பார்த்தீபன், தழிழரசுக் கட்சியின் மறைத்த தலைவர் மாவை சேனாதிராசாவின் மகன் கலையமுதன், வேலணை பிரதேச சபையின் உப தவிசாளர் வசந்தகுமாரன், உறுப்பினர்களான பிரகலாதன், கார்த்தீபன், நாவலன், ஞானரூபன் உள்ளிட்டவர்கள் மலர் தூவி அஞ்சலுத்தனர்.

அதனைத் தொடர்ந்து கலந்துகொண்டவர்களால் மலர் அஞ்சலிகள் செலுத்தப்பட்டது.

(அ-05)

# தியாகி திலீபன் இறுதிநாள் நினைவு வடமராட்சியில்!



வடமராட்சி, செப். 27

தியாகி திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று பருத்தித்துறையில் உள்ள அவரது நினைவாலயத்தில், காலை 8 மணிமுதல் அடையாள உண்ணாவிரதத்துடன் வடமராட்சி மக்களால் நினைவேந்தப்பட்டது.

மாவீரரான புரட்சித்தமிழின் பெற்றோரான பரஞ்சோதி தவமணியால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து தியாகி திலீபனின் திருவுருவ படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவேந்தலில் கலந்துகொண்டவர்களால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் சைவ மதகுருக்கள், பருத்தித்துறை மௌலவி, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு தியாகி திலீபனுக்கு மலரஞ்சலி செலுத்தினர். (அ-02-03-05)

# தியாகி திலீபனின் ஊர்திக்கு வீதியில் மக்கள் கூடி அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 27

தியாகி திலீபனின் 38 ஆவது நினைவு தின இறுதி நாளான நேற்று திலீபனின் ஊரெழுவில் அமைந்துள்ள அவர் பிறந்து வாழ்ந்த காணியில் இருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தீவக நினைவேந்தல் குழுவின் ஊர்திப் பவனிகள் காலை 7.00 மணிக்கு ஊரெழுவில் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு அக வணக்கம் செலுத்தப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.



இதன் பின்னர் அவ்விடத்தில் இருந்து இரு ஊர்திகளும் யாழ்.-பலாலி வீதியூடாக நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவிடத்தை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தன.

இதேவேளை அதே வழித்தடத்தில் அமைந்துள்ள விடுதலை போராட்டத்துக்காக தன் உயிரைத் தியாகம் செய்த பொன் சிவகுமாரின் உரும்பிராயில் அமைந்துள்ள உருவச் சிலைக்கும் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் நல்லூர் நோக்கி பயணித்த இரு ஊர்திகளுக்கும் மக்கள் வீதியோரங்களில் நின்று அஞ்சலி செலுத்தினர்.

இவ் ஊர்திப் பவனியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், நடராஜர் காண்டீபன், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டாளர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர். (அ)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் திலீபனுக்கு அஞ்சலி



வவுனியா, செப். 27

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினால் தியாகி திலீபனின் 38ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வு வவுனியாவில் உள்ள பொங்கு தமிழ் தூபியடியில் இடம்பெற்றது. இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உற வினர்களினால் திலீபனின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட் டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
27.09.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## காங்கேசன் துறைமுக அபிவிருத்தி

காங்கேசன் துறைமுகத்தால் இலாபம் இல்லை - எனவே அதனை அபிவிருத்தி செய்வதில் பயனில்லை என்று பிமல் ரத்நாயக்க தெரிவித்திருக்கின்றார். பிமல் போன்ற ஒருவர் அவ்வாறு கூறுகின்றார் என்றால் அது ஜே.வி.பியின் உயர்மட்ட தீர்மானம் என்பதை இலகுவாக புரிந்து கொள்ள முடியும். காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்கு மானியமாக நிதியளிப்பதற்கு இந்தியா முன்வந்திருக்கின்றது. ஆனால், திட்டத்தை முன்னெடுப்பதில் அரசாங்கம் ஆர்வம் இல்லாமல் இருக்கின்றது. திட்டத்தை முன்னெடுக்க மறுப்பதற்கு பின்னாலுள்ள உண்மையான காரணம் என்ன - இலாபம் இன்மையா அல்லது விருப்பம் இன்மையா?

ஜே.வி.பியின் கடந்த கால இந்திய எதிர்ப்பு நாம் அனைவரும் அறிந்ததே - அது பற்றி இப்போது பேசுவதில் பயனில்லை. ஜே.வி.பி. ஆட்சியை கைப்பற்றிய பின்னர் முன்னைய சித்தாந்தத்தை காவிக் கொண்டிருக்கின்றது, அதனால்தான் இவ்வாறு பின்னடிக்கின்றது என்றும் கூறிவிட முடியாது. ஏனெனில் இந்திய எதிர்ப்பு என்றால் அதனை தெற்கிலும் காண்பிக்க வேண்டும் ஆனால், அங்கு இந்திய திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தியாவின் பல திட்டங்கள் தெற்கில் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், வடக்கு கிழக்கில் இந்தியாவின் திட்டங்கள் என்று வருகின்ற போதுதான், அதில் தயக்கங்கள் காண்பிக்கப்படுகின்றன. திட்டத்தைப் பிற்போடுவதற்கான காரணங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஏன் இந்த நிலைமை? இது நிச்சயமாக இந்திய எதிர்ப்பு அல்ல. ஏனெனில், இந்தியாவை புறக்கணித்து பிற வெளிநாட்டு முதலீட்டாளர்களை வடக்கு - கிழக்கிற்குள் கொண்டுவர முடியாது. அதனை இந்தியா அனுமதிக்காது. தீவகங்களில் சீனாவின் முதலீட்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்ட விடயங்கள் எவ்வாறு தடைகளை எதிர்கொண்டன, பின்னர் கைவிடப்பட்டது என்பதை நாமறிவோம்.

வடக்கு, கிழக்கில் மட்டும் குறிப்பாக தமிழ்நாட்டோடு நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தக் கூடிய திட்டங்கள் கவனமாக தவிர்க்கப்படுகின்றனவா அல்லது வடக்கு, கிழக்கின் அபிவிருத்தியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அக்கறையற்றதாக இருக்கின்றதா அல்லது வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி தென்னிலங்கையின் பொருளாதார ஆதிக்கத்தை கேள்விக்குள்ளாக்கி விடும் என்று அஞ்சுகின்றதா? இப்படியான கேள்விகளில் இருந்துதான் விடயங்களை நோக்க வேண்டும். இது தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்விகளை முன்வைக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கின் அபிவிருத்தியில் இந்தியா பிரத்தியேக அக்கறை கொண்டிருக்கின்றது. ஏனெனில், இந்தியாவின் பெரும் முதலீட்டுத் திட்டங்கள் வடக்கு, கிழக்கை அடிப்படையாகக் கொண்டவை. இவைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அவற்றை பல்வேறு காரணங்களை கூறி தவிர்க்க முற்பட்டால் வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாது. காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்கு மானியமாக நிதியுதவி வழங்குவதற்கு இந்தியா முன்வந்த போதிலும் கூட, அதில் இலாபம் இல்லையென்று அரசாங்கம் கூறுமாயின் எந்த வகையில் அதில் இலாபம் இல்லை என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

## போதைப் பொருள் கடத்தல் வழக்கில் மலேசிய தமிழருக்கு மரண தண்டனை

கோலாலம்பூர், செப். 27

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் மலேசிய தமிழர் தட்சணாமூர்த்தி காத்தையாவுக்கு நேற்று முன்தினம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

போதைப்பொருள் குற்றத்துக்காக சிங்கப்பூரில் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவர் ஒருவர் தூக்கிலிடப்பட்டுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளில் இது மூன்றாவது முறை என்பது குறிப்பிடத்தக்கது. தட்சணாமூர்த்தி காத்தையா 45 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சிங்கப்பூரில் கடந்த 2011 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

சிங்கப்பூர் சட்டப்படி, 15 கிராமுக்கு மேல் ஹெரோயினுடன் ஒருவர் பிடிபட்டால் அவருக்கு மரண தண்டனை விதிக்க முடியும். அதன்படி, தட்சணாமூர்த்தி காத்தையாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அந்த தண்டனை கடந்த 2022 ஆம் ஆண்டே நிறைவேற்றப்படுவதாக இருந்தது. இருந்தாலும், மேன்முறையீடு காரணமாக அது நிறுத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், தூக்குத் தண்டனைக்கு எதிரான தட்சிணாமூர்த்தி காத்தையாவின் மேல்முறையீட்டு மனுவை நீதிமன்றம் கடந்த ஆகஸ்ட் மாதம் தள்ளுபடி செய்ததைத் தொடர்ந்து, அவர் தற்போது தூக்கிலிடப்பட்டுள்ளார்.

சிங்கப்பூரைப் போலவே மலேசியாவிலும் போதைப் பொருள் கடத்தல் குற்றங்களுக்கு மரண தண்டனை கட்டாயமாக இருந்தது.

ஆனால், சர்வதேச நெருக்கடி காரணமாக மரண தண்டனையை 30 முதல் 40 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையாக மலேசிய அரசு குறைத்தது.

கடந்த 2024 இல் மட்டும் மலேசிய அரசு 1,000 மரண தண்டனைகளை சிறைத் தண்டனைகளாகக் குறைத்தது.

ஆனால் சிங்கப்பூரிலோ போதைப் பொருள் குற்றங்களுக்கான மரண தண்டனை நிறைவேற்றங்கள் இரண்டு ஆண்டுகளில் இரட்டிப்பாகியுள்ளன. இதற்கு மனித உரிமை அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துவருகின்றன. (அ)

## மன்னாரில் விழிப்புணர்வு நாடகம் !

மன்னார், செப். 27

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகம் ஒன்று நேற்று முன் தினம் மாலை மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்றது.

சிறுவர்களைப் பாதுகாக்கும் நோக்கோடு சீயோன் திருச்சபையின் போவாஸ் நிலையத்தின் ஏற்பாட்டில், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள அடம்பன் மற்றும் ஆண்டாங்குளம் பிரதேசத்தில் குறித்த விழிப்புணர்வு வீதி நாடகம் இடம்பெற்றது.

சிறுவர்களை பாதுகாப்பது ஒவ்வொரு தனிநபர்களினதும், சமூகத்தினதும், அரசினதும் கடமையாகும் என்பதை கருத்தில் கொண்டு குறித்த விழிப்புணர்வு வீதி நாடகம் இடம்பெற்றது.

## சர்வதேச உள நல தினத்தை முன்னிட்டு வடமராட்சியில் விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம், செப். 27

வடமராட்சியில், சர்வதேச உள நல தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையினரால் உள நல விழிப்புணர்வு நடைபவனி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று காலை 7:30 மணியளவில் மாலு சந்தையிலிருந்து ஆரம்பமான நடைபவனி மந்திகை சந்தி, சிலையடி சந்தி ஊடாக மந்திகை சந்தை சென்று அங்கிருந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சென்றது.

இந்த நடைபவனியை யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பதில் மருத்துவ அத்தியட்சகர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பருத்தித்துறை நகர பிதா வின்சன் டிபோல் டக்ளஸ் போல், பருத்தித்துறை பிரதேச சபை உப தவிசாளர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை விசேட மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், மற்றும் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ-2)

## யாழ்ப்பாண திரைப்படக் கழகத்தின் மாதாந்த திரையிடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப.27


யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் மாதாந்த திரையிடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்கு, 18/2., அம்மன் வீதி (பலாலி வீதியிலுள்ள வீனஸ் மருத்துவமனை அருகில்), கந்தர் மடம், யாழ்ப்பாணத்திலுள்ள ‘எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

புகழ்பெற்ற மலையாளத் திரைப்பட நெறியாளரான அடூர் கோபாலகிருஷ்ணனின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட, ‘கதாபுருஷன்’ என்ற திரைப்படம் திரையிடப்படவுள்ளது.

இத்திரைப்படமானது 1996 ஆம் ஆண்டில் சிறந்த திரைப்படத்துக்கான இந்தியத் தேசிய விருதைப் பெற்றுள்ளது.

ஆங்கிலத் துணைத் தலைப்புகளைக் கொண்ட இத்திரைப் படம் இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 27 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 11
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சஷ்டி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததை போல் இருப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவை.

**இடபம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். தாய்வழியில் ஆதரவு பெருகும். சக ஊழியர்கள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**மிதுனம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ஆதரவு அதிகரிக்கும். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். அமோகமான நாள்.

**கடகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் வந்த பிரச்னைகள் விலகும். கனவு நனவாகும்.

**சிம்மம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். புது வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**கன்னி**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். புது நட்பு மலரும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்துசெல்லும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். ரகசியங்களை வெளியிட வேண்டாம். இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
கணவன் மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**மகரம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். வீட்டை அழகுபடுத்துவீர்கள். திறமை கூடும். இனிமையான நாள்.

**கும்பம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

# அஸ்வெசும, வீதி, வீடமைப்பு மற்றும் கிராமிய அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 27


பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டம் மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களில் கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்பு, தேசிய ஒருமைப்பாட்டினை மேம்படுத்தும் கருத்திட்டங்கள், பனை விதை நடுகைக்கான நிதி ஒதுக்கீடு, அஸ்வெசும திட்டம் ஆகியவற்றின் முன்னேற்றம் என்பன தொடர்பாக ஆராயப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர், வேலைத் திட்டங்களை குறிப்பிட்ட கால அவகாசத்தில் முடிவுறுத்தியவர்களுக்கு பாராட்டுக்கள். முடிவுறுத்தாத வேலைத் திட்டங்களுக்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கப்பட்டு திட்டங்களை நிறைவேற்றுமாறு அரசாங்க அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர், உதவி மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்ட, பிரதேச செயலக பிரதி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், மாவட்ட, பிரதேச செயலக கணக்காளர்கள் மற்றும் மாவட்ட செயலக திட்டமிடல் துறைசார் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (எ)

# குப்பிழானில் வீட்டுக்கு மேல் மரம் முறிந்து விழுந்ததால் பாரிய சேதம்



யாழ்ப்பாணம், செப். 27

யாழ்ப்பாணம் - குப்பிழான் பகுதியில் வீசிய பலத்த காற்று காரணமாக பனை மரம் ஒன்று வீட்டுக்கு மேல் முறிந்து விழுந்ததால் பாரிய சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார்.

இந்த அனர்த்தமானது ஜே/211 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இடம்பெற்றுள்ளது. இதனால் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரும் சேதமடைந்துள்ளது. (எ-05)

# சிவகுரு ஆதீனத்தில் ஆன்மீகவுரை

யாழ்ப்பாணம், செப். 27

நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் நவராத்திரியை முன்னிட்டு தினமும் மாலை 06. 00 - 06. 30 மணி வரை ஆன்மீகவுரை ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் நிகழ்த்தப்படுகின்றது.

இதன் தொடர்ச்சியாக இன்று சனிக்கிழமை "பொறுத்தார் பூமி ஆள்வார்" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தப்படும். (எ)

# இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், செப். 27

மருத்துவமனை இரத்த வங்கிகளில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக இரத்ததான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கீரிமலை - கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் இணைந்து விதையனைத்தும் விருட்சமே செயல்திட்டத்தினூடாக இந்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 09. 00 மணிமுதல் பிற்பகல் 03.00 மணி வரை கருகம்பனை நூலகத்தில் இந்த இரத்த தான முகாமை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, தன்னார்வ குருதிக் கொடையாளர்களுடைய பங்களிப்பை ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்த்துள்ளனர். (எ-05)

# தற்கொலை தடுப்பு தினத்தையொட்டி ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வு

வவுனியா, செப். 27

சர்வதேச தற்கொலை தடுப்பு தின நிகழ்வுகளின் தொடர்ச்சியாக வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது தற்கொலை தொடர்பாகவும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் செய்தி அறிக்கையிடலில் பின்பற்ற வேண்டிய விடயம் தொடர்பாகவும் மனநல மருத்துவ நிபுணர் மதுசி செனவிரத்தின மற்றும் வவுனியா பொது மருத்துவமனை மனநல மருத்துவர் சி. சுதாகரனாலும் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மனநல மருத்துவ அதிகாரி தி. வைதேகியின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில் வவுனியா மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்கள், ஊடகத்துறை சார்ந்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 27

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் அராலி செந்தமிழ் சனசமூக நிலையத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசு கட்சி வட்டுக்கோட்டை கிளையின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஈகச்சுடர் ஏற்றப்பட்டு, தியாக தீபத்தின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரைகள் ஆற்றப்பட்டன. இறுதியாக நினைவேந்தலில் கலந்துகொண்ட அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தன், உப தவிசாளர் க. இலங்கேஸ்வரன், வட்டுக்கோட்டை சபையின் முன்னாள் உறுப்பினர் ச. சுகிர்தன், வலி. மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள், மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்தியத்தில் சீனாவின் முதலீடுகள் இராணுவ மயமாக்கும் நோக்கமற்றவை

## தெற்காசிய கற்கைகளுக்கான நிலையம்

கொழும்பு, செப். 27

**"முத்து மாலை" போன்ற கதைகள், இந்திய பெருங்கடல் பிராந்தியத்துக்கான சீன முதலீடுகளை தவறாக சித்தரிக்கின்றன. உதாரணமாக, கராச்சியில் உள்ள குவாடர் துறைமுகத்தில் 160 கோடி அமெரிக்க டொலர், அம்பாந்தோட்டையில் 200 கோடி அமெரிக்க டொலர் மற்றும் ஜிபூட்டியில் பல நூறு கோடி டொலர் முதலீடுகள், இவை அனைத்தும் வர்த்தக இணைப்பு மற்றும் உள்ளூர் பொருளாதாரங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவையே தவிர, இந்தப் பிராந்தியத்தை இராணுவ மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டவை அல்ல" என தெற்காசிய கற்கைகளுக்கான நிலையத்தின் பிரதி பணிப்பாளரும் சிச்சுவான் பல்கலைக்கழகத்தின் இணைப்பாளருமான கலாநிதி ஹுவாங் யுன்சோங் தெரிவித்தார்.**

12ஆவது காலி கலந்துரையாடலில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 2025 ஆம் வருடத்தில், புவிசார் அரசியல் மாற்றங்கள், பொருளாதாரச் சார்புநிலைகள் மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை உலகம் சந்தித்துக்கொண்டிருக்கும் வேளையில், 7 கோடி சதுர கிலோமீற்றர்களை உள்ளடக்கியதும், 30இற்கும் மேற்பட்ட நாடுகளுடன் எல்லைகளை கொண்ட இந்திய பெருங்கடல், உலகளாவிய வர்த்தகத்தின் உயிர்நாடியாகத் திகழ்கிறது. உலக கடல்வழி எண்ணெய் வர்த்தகத்தில் சுமார் 75வீதம் வர்த்தகம் இந்த வழியில்தான் நடைபெறுகிறது. இது ஆபிரிக்காவின் வளங்களையும், ஐரோப்பாவின் சந்தைகளையும் இணைக்கும் ஒரு மிக முக்கியமான உலக வழித்தடமாக உள்ளது.

சீனாவின் பார்வையில், இந்தியப் பெருங்கடலுடனான உறவு, பரஸ்பர மரியாதை, பரஸ்பர நன்மைகள் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையில் அமைந்தது. உலகின் மிகப்பெரிய வர்த்தக நாடான சீனா, அதன் எண்ணெய் இறக்குமதியில் பாதிக்கும் அதிகமாகவும், பெரும்பாலான ஏற்றுமதிகளுக்கும் இந்த கடல் வழிகளை நம்பியுள்ளது. கடல்சார் பாதுகாப்பிற்கு வழங்கும் உள்கட்டமைப்பு முதலீடுகள் மற்றும் பங்களிப்புகள் மூலம் இருப்பு உறுதிப்படுத்தப்படுகிறது.

21 ஆம் நூற்றாண்டின் கடல்சார் பட்டுப் பாதை அனைத்து மக்களுக்கும் இடையேயான இணைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, சிலர் சீனாவின் பங்களிப்பை ஓர் அச்சுறுத்தலாக பார்க்கின்றனர். பயங்கரவாதம், காலநிலை பாதிப்புகள், விநியோகச் சங்கிலி இடையூறுகள் போன்ற பல சவால்களுக்கு கூட்டு நடவடிக்கை தேவைப்படும்போது, இது பூச்சிய விளைவு விளையாட்டாகச் சித்தரிக்கப்படுகிறது - என்றும் கூறினார். (ஐ)

# பணம் தொடர்பில் தகராறு; ஒருவர் அடித்துக் கொலை!

கொழும்பு, செப். 27

பணம் தொடர்பில் ஏற்பட்ட தகராறில் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார்.

நீர்கொழும்பு - பெரியமுல்லை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்தவர் நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் நீர்கொழும்பை சேர்ந்த 44 வயது நபராவார். அவர் வர்த்தக நிலையம் ஒன்றில் பணியாற்றி வந்துள்ளார் என்றும் தெரிய வருகிறது.

தாக்குதலை நடத்திய சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கொழும்பில் பஸ்ஸின்மீது மரம் முறிந்து விழுந்தது!



கொழும்பு, செப். 27

பேருந்தின் மீது மரம் ஒன்று முறிந்து விழுந்துள்ளது. இந்த விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

கொழும்பு - ஒல்கொட் மாவத்தை பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ரயில் தலைமையகம் அருகில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தால் அந்தப் பகுதியில் சில மணிநேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



# பாதுகாப்பு செயலருடன் பிரான்ஸ் தூதுவர் சந்திப்பு

கொழும்பு, செப். 27

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ரெமி லம்பேர்ட் பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தவை சந்தித்துள்ளார்.

பிரான்ஸ் தூதரை வரவேற்ற பாதுகாப்பு செயலாளர், அவருடன் சுமூகமான கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. இது, பாதுகாப்பு மற்றும் கடல்சார் துறைகளில் மூலோபாய ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் பிரான்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையிலான பரஸ்பர உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுவதாக அமைந்ததாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் இலங்கைக்கு அளித்துள்ள உதவிக்கு பாதுகாப்பு செயலாளர் நன்றி தெரிவித்ததுடன் தற்போதுள்ள இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டையம் எடுத்துரைத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய இலக்கத்தகடுகள் வழங்கப்படும்

## போக்குவரத்து அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, செப். 27

புதிய பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய புதிய வாகன இலக்கத்தகடுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் வாய்மூல வினாக்களுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும், "தற்போது சந்தையில் வாகன இலக்கத்தகடுகள் இல்லாத பெருமளவான வாகனங்கள் உள்ளன. முந்தைய வர்த்தக நிறுவனங்களுடன் அரசியல் நடவடிக்கை, ஊழல் மற்றும் பொறுப்பற்ற தன்மையால் மோட்டார் வாகனத் திணைக்களம் சுமார் 10 ஆண்டுகளாக முன்னேறவில்லை என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

புதிய சாரதி அனுமதிப் பத்திரம் தயாரிக்கப்படும் என்றும், வாகன இலக்கத்தகடுகள் இல்லாத வாகனங்களுக்கு அடுத்த வாரம் தற்காலிக தீர்வுகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# பத்மே மறைத்து வைத்த 500 தோட்டாக்கள் சிக்கின

கொழும்பு, செப். 27

பாதாள உலகக் குழு உறுப்பினரான "கெஹெல்பத்தர பத்மே" வால் மறைத்து வைக்கப்பட்டவை என்று கூறப்படும் 500இற்கும் மேற்பட்ட ரி-56 ரக தோட்டாக்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பு - பேலியகொடை மீன் சந்தைக்கு அருகில் கைப்பற்றப்பட்ட இந்தத் தோட்டாக்களுடன் ரி-56 ரக 4 மகசின்களும், மைக்ரோ பிஸ்டலும் கைப்பற்றப்பட்டன.

மேல் மாகாண வடக்கு குற்றவியல் பிரிவு முன்னெடுத்த விசாரணைகளுக்கு இவை கண்டறியப்பட்டன.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான "கெஹெல்பத்தர பத்மே" என அழைக்கப்படும் மன்தினு பத்மசிறி உள்ளிட்ட 6 பாதாள உலகக் குழுவினர் இந்தோனேஷியாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொலிஸ் பணிமனைக்குள் கைவரிசை காட்டிய திருடர்

கொழும்பு, செப். 27

கொழும்பு பிரதி பொலிஸ்மா அதிபர் பணிமனையின் 6ஆவது மாடியில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பு - கோட்டை - ஒல்கொட் மாவத்தையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் பிரதி பொலிஸ்மா அதிபர் பணிமனையின் பொறுப்பதிகாரி கொழும்பு மத்திய பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவில் கடந்த புதன்கிழமை முறைப்பாடு அளித்துள்ளார்.

இந்தத் திருட்டு கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதிக்கும் செப்ரெம்பர் 24ஆம் திகதிக்கும் இடையில் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பிரதி பொலிஸ்மா அதிபர் பணிமனையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு சி.சி.ரீ.வி. கமெராக்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும் திருடர்கள் கைவரிசையை காட்டியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

பணிமனையின் கதவை உடைத்தே திருடர்கள் உள்நுழைந்துள்ளனர். அங்கிருந்து மின்சார கம்பிகள் திருடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அதிக விலைக்கு அரிசி; ரூ. 5 இலட்சம் அபராதம்

கொழும்பு, செப். 27

இறக்குமதி செய்யப்பட்ட சம்பா அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்த தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 5 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

காலி நீதிவான் நீதிமன்றம் இந்த அபராதத்தை விதித்துள்ளது.

நிறுவனத்தின் உரிமையாளர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இந்த அபராதம் விதிக்கப்பட்டதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.


சம்பந்தப்பட்ட நிறுவனம் இறக்குமதி செய்யப்பட்ட சம்பா அரிசியை ஒரு கிலோகிராம் 273 ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளது. ஆனால், ஒழுங்குபடுத்தப்பட்ட விலை 230 ரூபாயாகும் என்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# கடும் மழை, பனி மூட்டத்தால் நுவரெலியாவில் பெரும்அவதி



நுவரெலியா, செப். 27

நுவரெலியா மாவட்டத்தில் மஸ்கெலியா உட்பட பல பகுதிகளிலும் நேற்று அதிகாலை முதல் அடைமழை பெய்து வருகின்றது.

இதனால் பெருந்தோட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், இப் பகுதியில் உள்ள பண்ணையாளர்கள், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கன மழையுடன் எங்கு பார்த்தாலும் பனி மூட்டமும் நிலவுகின்றது. எனவே, சாரதிகள் அவதானத்துடன் வாகனம் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கண்டி மாவட்டத்தில் புஸ்ஸல்லாவை, கம்பளை உள்ளிட்ட பகுதிகளிலும் காலை முதல் கடும் மழை பெய்துவருகின்றது. (எ)

# தெல்தெனியவில் விபத்து; பெண் ஒருவர் உயிரிழப்பு

கண்டி, செப். 27

தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி - பதியத்தலாவ வீதியின் கெங்கல்ல பகுதியில், வீதியைக் கடக்க முற்பட்ட பாதசாரி மீது பேருந்து மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

கண்டி நகர் நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்றே இவ்வாறு மோதி விபத்து ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

விபத்தில் பலத்த காயமடைந்த பெண் தெல்தெனிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் பலகொல்ல பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய பெண் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)



# “தியாகிகள் சாகலாம் தியாகங்கள் சாகாது”

காரைதீவு, செப். 27

தியாகிகள் சாகலாம் தியாகங்கள் சாகாது.

அதுபோல தியாகி திலீபனின் தியாகம் என்றும் உயிர் வாழும் என்று காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கி. ஜெயசிறில் தெரிவித்தார்.

தியாகி திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்று முன்தினம் காரைதீவில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ-08)

# மத்திய மாகாண அரச அதிகாரிகளுக்கு ஏஐ தொழில்நுட்பம் குறித்து விழிப்புணர்வு

கண்டி, செப். 27

அரசாங்கத்தின் டிஜிற்றல் மயமாக்கல் திட்டம் மற்றும் ஏஐ தொழில்நுட்பத்தின் பயன்பாடு குறித்து மாகாண மட்டத்தில் உள்ள அரச நிறைவேற்று அதிகாரிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் தொடரின் முதலாவது மாகாண மட்ட நிகழ்ச்சி நேற்று கண்டி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அரசாங்கத்தின் டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்களை விளக்குவதையும் ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்தும் அதிகாரிகளின் அறிவை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட இந்த நிகழ்ச்சி, மத்திய மாகாண சபை, மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் அனைத்து நிறைவேற்று அதிகாரிகளின் பங்கேற்புடன் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கொழும்பை மையமாகக் கொண்டு டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் ஏஐ தொழில்நுட்பம் குறித்து அரச அதிகாரிகளுக்கான ஆறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இதுவரை நடத்தப்பட்டுள்ளது டன், இதில் 4,000இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் மாகாண மட்டத்தில் இந்த நிகழ்ச்சியை நடத்தி, அரசாங்கத்தின் டிஜிற்றல் மயமாக்கல் திட்டம் தொடர்பாக அரச அதிகாரிகளின் வகிபாகம் மற்றும் ஏஐ தொழில்நுட்பத்தை அரச நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவது குறித்து கொழும்புக்கு வெளியே உள்ள அனைத்து அரச அதிகாரிகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டம் ஜனாதிபதி அலுவலகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ், டிஜிற்றல் பொருளாதார அமைச்சு மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ)

# பாடசாலை மாணவர்களுக்கு சிறுகதை பயிற்சிப்பட்டறை

மட்டக்களப்பு, செப். 27

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் மட்டக்களப்பு, மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த பாடசாலை மாணவர்களுக்கான சிறுகதை பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் உ. உதயசிறீதரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், வளவாளர்களாக எழுத்தாளர்களும் கவிஞர்களுமான கலாநிதி பிரதௌஸ் மற்றும் டேவிட் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி பட்டறையை நடத்தினர்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலிருந்து 75 இற்கும் அதிகமான மாணவர்களும் எழுத்தாளர்களும் கலந்து கொண்டனர். (எ)



# கோழிகளை ஏற்றிச்சென்ற லொறி காட்டு யானை மீது மோதி விபத்து!

தம்புள்ளையில் நேற்று அதிகாலை சம்பவம்

தம்புள்ளை, செப். 27

கோழிகளை ஏற்றிச்சென்ற லொறி ஒன்று காட்டு யானை மீது மோதி விபத்துக்குள்ளானதாக தம்புள்ளை பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளை - பக்கமுன பிரதான வீதியில் ரிதிஸ்ல வனப்பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டு யானை ஒன்று வீதியின் நடுவில் நின்ற நிலையில், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி, யானை மீது மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் லொறியின் சாரதி காயமடைந்த நிலையில்தம்புள்ளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த விபத்தின் போது லொறியில் இருந்த கோழிகள் பல உயிரிழந்த நிலையில் வீதியில் சிதறுண்டு கிடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தம்புள்ளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# காட்டு யானைகளால் அச்சம் தீர்வின்றி தவிக்கும் மக்கள்

மட்டக்களப்பு, செப். 27

கடந்த 11ஆம் திகதி மட்டக்களப்பு வாவியை கடந்து புதுக்குடியிருப்பு கிராமத்துக்குள் நுழைந்த காட்டு யானைகள் திசைமாறி தினம் தினம் ஊர் ஊராக சுற்றித்திரிவதை அவதானிக்க முடிகிறது.

நேற்று முன்தினம் தேற்றாத்தீவு பகுதியை கடந்து களுதாவளை, களுவாஞ்சிக்குடி ஆற்றங்கரை ஓரங்களை நோக்கி இந்த யானைகள் நகர்வதை அவதானிக்க முடிந்தது.

இந்தக் காட்டு யானைகளைத் துரத்தும் பணியில் வெல்லாவெளி பகுதி வனஜீவராசி திணைக்களத்தினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் அழகிய கொம்பன் யானை ஒன்று உள்ளடங்கலாக மொத்தமாக 04 யானைகள் திரிவதை அவதானிக்க முடிகிறது.

இந்தக் காட்டு யானைகள் கூட்டம் தொடர்ச்சியாக பல்வேறு பயன் தரும் மரங்களையும் விவசாய நிலங்களையும் அழித்துள்ளமை தமக்கு வேதனையளிப்பதாகவும் தமது பொருளாதாரம் பாதிக்கப்படுவதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.



சம்பவ இடத்துக்கு மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் மே. வினோராஜ் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் வருகை தந்து நிலமையை அவதானித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## எந்தவோர் அழுத்தத்துக்கும்...

சமூகத்தினருடனான சந்திப்பில்
பங்கேற்றபோது ஜனாதிபதி இதனைத்
தெரிவித்தார்.

நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள்
சபைக்கான இலங்கையின் நிரந்தரத்
தூதரகம் ஏற்பாடு செய்த இந்தக் கூட்
டத்தில் இலங்கை தொழில்வல்லுநர்கள்
உட்பட அமெரிக்காவில் வசிக்கும்
பெருந்தொகையானவர்கள் பங்கேற்றது.
அவர்களின் பிரச்னைகளும் இங்கு ஆரா
யப்பட்டதோடு இலங்கையின் புதிய
பொருளாதார மாற்றத்திற்கான ஜனாதி
பதியின் அர்ப்பணிப்பு பாராட்டப்
பட்டது.

இலங்கையில் தற்போது நடை பெற்று
வரும் புதிய பொருளாதார, சமூக மற்
றும் அரசியல் மாற்றம் குறித்து அவர்க
ளுக்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி,
இலங்கைக்கு அச்சமின்றி வந்து முதலீடு
களைச் செய்வதன் மூலம் நாட்டைக்
கட்டியெழுப்பும் திட்டத்திற்கு பங்களிக்
குமாறு அவர்களிடம் கோரினார்.

அவரது உரை வருமாறு-

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு
முன்பு, நான் நியூயோர்க் நகரில் இலங்
கையர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி
னேன். செப்ரெம்பர் 21 ஆம் திகதி நாங்
கள் அடைந்த வெற்றியில் வெளிநாடு
களில் உள்ள இலங்கையர்கள் பெரும்
பங்காற்றினர். அதற்காக நான் மிகவும்
நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

கடந்த ஆட்சியை முடிவுக்குக்
கொண்டு வந்து புதிய அரசாங்கத்தை
அமைக்க நீங்கள் ஏன் முடிவு செய்தீர்
கள்? அந்த முடிவு ஒரு சாதாரண முடிவு
அல்ல. நாங்கள் தலைமுறை தலைமுறை
யாக அரசியல் உரித்துள்ள குழு அல்ல.
ஆனால் 2019 தேர்தலில் 3 வீத வாக்கு
களைப் பெற்ற ஒரு இயக்கம்.

இருப்பினும், 2024 ஜனாதிபதித்
தேர்தலில் நாங்கள் பாரிய வெற்றியைப்
பெற்றோம். அதைத் தொடர்ந்து நடந்த
பொதுத் தேர்தலில், விகிதாசார பிரதி
நிதித்துவ முறையின் கீழ் இலங்கை வர
லாற்றில் அதிக எண்ணிக்கையிலான
பாராளுமன்ற உறுப்பினர்களைப் பிரதி
நிதித்துவப்படுத்துவதன் மூலம் நாங்கள்
ஒரு பெரிய வெற்றியைப் பெற்றோம்.

அந்த வெற்றியை அடைந்து வருடம்
கடந்துவிட்டது. இந்த அரசாங்கம் எந்த
நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது?
அந்த நோக்கத்துக்கு ஏற்றவாறு முடிவு
கள் எட்டப்பட்டதா? இல்லையா?
அதன் அடிப்படையில் கடந்த ஆண்டு
குறித்து மீளாய்வு செய்ய வேண்டும்
என்று நினைக்கிறேன்.

ஆனால், இந்த ஆட்சியை உருவாக்கு
வதற்கு பங்களிக்காத மற்றும் அதை
எதிர்த்த குழுக்களின் அளவுகோல்களால்
நம்மை அளவிட நாங்கள் தயாராக
இல்லை. இந்த மாற்றத்திற்கு வழிவகுத்த
காரணிகளைக் கொண்டே எம்மைப்
பற்றி தீர்மானிக்க வேண்டும்.

நீங்கள் வெளிநாட்டில் வாழ்ந்தாலும்,
நம் நாட்டில் 2022/2023 ஆம் ஆண்டு
பற்றி எழுதினால், நாடு வங்குரோத்
தடைந்த காலகட்டமாக அது எழுதப்
படும். 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி,
கடனை செலுத்த மாட்டோம் என்று
அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறி
வித்தது.

அனைத்தும் வீழ்ச்சியடையத்
தொடங்கின. அபிவிருத்தித் திட்டங்கள்
பாதியில் நின்றுவிட்டன, தொழில்
வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளி
யேறத் தொடங்கினர். சாதாரண மக்கள்
தங்கள் அன்றாட வாழ்க்கையை மேற்
கொள்ள போதுமான வருமானம் இல்
லாத சூழ்நிலை உருவாக்கப்பட்டது.
பொருளாதார ரீதியாக ஒரு நாட்டிற்கு
ஏற்படக்கூடிய அனைத்து பேரழிவு சூழ்
நிலைகளும் எழுந்தன. இது எத்தகைய
தென்றால் இலங்கையில் முதல் முறை
யாக, ஆட்சியாளரை மக்களே தூக்கி
எறிந்தனர்.

சுதந்திரத்திற்குப் பின்னர், நம் நாட்
டில் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும்
தேர்தல்கள் மூலம் ஆட்சி மாற்றங்கள்
நிகழ்ந்துள்ளன. இருப்பினும், இலங்கை
யில் முதல் முறையாக, மக்கள் தெருக்க
ளில் இறங்கி தேர்தல் இல்லாமல் ஆட்சி
யாளர்களை துறத்தியடித்தார்கள். இது
பொருளாதாரத்தில் ஒரு பெரிய நெருக்
கடியை உருவாக்கியது. அதனால், அந்த
பொருளாதார நெருக்கடியைத் தணித்து,
இலங்கையில் மீண்டும் ஒருபோதும்
நடக்காத வகையில் ஸ்திரத்தன்மையை
உருவாக்குவதே எங்களுக்கு பிரதான
சவாலாக இருந்தது. ஒரு வருடத்தில்,
நமது நாடு இழந்த பொருளாதார நெருக்
கடியில் கணிசமான அளவை சீரமைத்து,
ஸ்திரத்தன்மையை உருவாக்க முடிந்துள்
ளது. இன்று, பொருளாதார நெருக்
கடியை மிக வேகமாகத் தணித்த நாடாக
இலங்கை அறிமுகப்படுத்தப்படத்
தொடங்கியுள்ளது. இது சர்வதேச நிதி
நிறுவனங்கள் வெளியிட்ட அறிக்கை
களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற பொருளாதார வீழ்ச்சி
யில், அது நாட்டிற்கு இழந்த ஒரு
தசாப்தமாகிறது என பொருளாதார நிபு
ணர்கள் குறிப்பிடுகின்றனர். அதாவது,
ஒரு நாடு அதன் முன்பிருந்த நிலையை
அடைய 10 ஆண்டுகள் செல்லும்.
இருப்பினும், 2019 ஆம் ஆண்டு இலங்கை
கொண்டிருந்த பொருளாதாரத்தை
அடுத்த ஆண்டு எட்ட முடியும் என்று
நாங்கள் நம்புகிறோம். மிகக் குறுகிய
காலத்தில் நாங்கள் அதை மேற்கொண்
டுள்ளோம். அனைத்து தரவுகள் மற்றும்
புள்ளிவிவரங்களின் அடிப்படையில்
இதை நாம் கணிக்க முடியும்.

நமது நாட்டின் பொருளாதாரம்
வீழ்ச்சியடைந்ததற்கு வழிவகுத்த முக்கிய
காரணிகளில் ஒன்று, எமக்குத் தேவை
யான அளவுடொலர்களை சம்பாதிக்க
தவறியமையாகும். இருப்பினும்,
டொலர்களை சம்பாதிக்கக்கூடிய நான்கு
முக்கிய துறைகளிலும் இந்த ஆண்டு
வரலாற்றில் மிக உயர்ந்த வளர்ச்சி
ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு, சுமார் 2.5
மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நம்
நாட்டிற்கு வருகை தருவார்கள். அதன்
படி, 2025 ஆம் ஆண்டு இலங்கை வர
லாற்றில் அதிக எண்ணிக்கையிலான
சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை
தந்த ஆண்டாக இருக்கும்.

மேலும், இந்த ஆண்டு வெளிநாட்
டில் இருந்து நாட்டுக்கு அதிக அளவு
டொலர்கள் பெறப்படும் ஆண்டாக
இருக்கும். அதன்படி, இந்த ஆண்டு
அதிக வருமானம் ஈட்டப்பட்ட ஆண்
டாக இருக்கும். நாங்கள் ஆட்சிக்கு வந்து
ஒரு வருடம் கழித்து, ஒரு பில்லி யன்
டொலர் வெளிநாட்டு முதலீடு களைப்
பெற்றுள்ளோம்.

மேலும், துறைமுக நகரத்தை
அண்டியதாக 1.4 பில்லியன் டொலர்
வெளிநாட்டு முதலீடுகள் பெறப்பட்
டுள்ளன. அதன்படி, இந்த ஆண்டு
வெளிநாட்டு முதலீடுகள் அதிகம்
ஈர்க்கப்பட்ட ஆண்டாகவும் இருக்கும்.
நாம் எதிர்கொண்டிருக்கும் டொலர்
கையிஇருப்பு சிக்கலை எம்மால் தீர்க்க
முடியும். 2028 ஆம் ஆண்டுக்குள் நமது
கடன் திருப்பிச் செலுத்துதலைத்
தொடங்கும் சவாலை நாம் எதிர்கொள்
கிறோம்.

எனவே, 2028 ஆம் ஆண்டுக்குள்,
கடனைத் திருப்பிச் செலுத்தத் தேவை
யான திறன் கொண்ட பொருளாதா
ரத்தை உருவாக்க முடியும் என்ற
நம்பிக்கையுடன் நாங்கள் செயல்படுகி
றோம். அதன்படி,இலங்கை கடனைத்
திருப்பிச் செலுத்தும் நெருக்கடியிலி
ருந்து கடனைத் திருப்பிச் செலுத்தும்
சூழ்நிலைக்கு வளர்ச்சி கண்டுள்ளது.

நாம் எதிர்கொண்ட அடுத்த நெருக்
கடி, அரசாங்கத்திற்குத் தேவையான
வருவாயை உருவாக்கத் தவறியது. நமது
நாட்டின் வரவு செலவுத் திட்டத்தின்
ஊடாக எதிர்பார்க்கப்படும் வருவாய்
ஒருபோதும் பெறப்பட்டது கிடையாது.
இருப்பினும், இலங்கையில் முதல்
முறையாக, 2025 ஆம் ஆண்டில் நாங்கள்
எதிர்பார்த்ததை விட அதிகமான அரச
வருவாயைப் பெற்றுள்ளோம். மேலும்,
எப்போதும் அரசாங்கத்திற்கு வரவு
செலவுத்திட்ட மதிப்பீட்டை விட அதிக
செலவுகளைச் செய்ய வேண்டியிருந்தது.
இந்த ஆண்டு, அதுவும் குறைந்துள்ளது.
எனவே, நாங்கள் பொருளாதார ஸ்திரத்
தன்மையை உருவாக்கியுள்ளோம். இருப்
பினும், அது போதுமானதல்ல.

இந்த பொருளாதாரம் எட்டியுள்ள
நன்மைகள் சாதாரண மக்களைச்
சென்றடைய வேண்டும். பொருளாதா
ரத்தை ஸ்தீரப்படுத்தாமல், அந்த முடிவு
களை கீழ்மட்டத்திலுள்ள மக்களுக்கு
வழங்க முடியாது. எனவே, எங்கள் முதல்
சவால் பொருளாதாரத்தை பலப்
படுத்துவதாகும்.இப்போது நாங்கள்
எதிர்கொள்ளும் சவால் பொருளாதாரத்
தில் அடையப்பட்ட இந்த வெற்றிகளை
கீழ்மட்டத்தைச் சென்றடைய இடமளிப்
பதாகும். இந்த ஆண்டு, எங்கள் வரவு
செலவுத்திட்டம் முற்றிலும் அந்த நோக்
கத்தையே கொண்டுள்ளது. விவசாயம்
மற்றும் மீன்பிடித் தொழிலை மேம்படுத்
துவதற்கான அரசாங்க தலையீடு, சிறு
மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை
உருவாக்குதல் மற்றும் புதிய பொருளாத
ார வாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற
பல துறைகளை இலக்காகக் கொண்டு
இந்த வரவு செலவுத் திட்டத்தை நாங்
கள் தயாரிக்கிறோம்.

அதேபோன்று, நாங்கள் ஆட்சிக்கு
வந்தபோது, இந்த நாட்டு மக்களுக்கு
எங்கள் அரச கட்டமைப்பு தொடர்பில்
எதிர்பார்ப்புகள் இருந்தன. எங்கள் அரச
கட்டமைப்பு மிகவும் செயற்திறனற்ற
மற்றும் செயலிழந்த அரச கட்டமைப்பு
மாகும். எனவே, நாட்டைக் கட்டியெ
ழுப்புவதில், இந்த அரச கட்டமைப்பின்
செயல்திறன் அதிகரிக்கப்பட வேண்டும்.
- என்றார். (அ)

## ஜப்பான்...

ஜனாதிபதி அமெரிக்கா சென்றிருந்தார்.

அந்த விஜயத்தை நிறைவு செய்து,
நேற்று முன் தினம் இரவு ஜோன் எவ்.
கெனடி சர்வதேச விமான நிலையத் தில்
இருந்து, ஜப்பானுக்குப் பயணமானார்.

ஜப்பானிய அரசாங்கத்தின் அழைப்
பின் பேரில், இன்று முதல் எதிர்வரும் 30
ஆம் திகதி வரை, பல்வேறு நிகழ்வுகளில்
பங்கேற்கவுள்ளார்.

இந்த விஜயத்தில், வெளிநாட்டலு
வல்கள், வெளி நாட்டு வேலைவாய்ப்பு
மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித
ஹேரத் இணைந்து கொண்டுள்ளார்.
(அ)

## பிறந்து...

கொண்டு சென்று அரை மணி நேரத்தில்
குழந்தை உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் மீதான மரண
விசாரணைகளை திடீர் மரண விசா
ரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம்
மேற்கொண்டார். சாட்சிகளை சுன்னா
கம் பொலிஸார் நெறிப்படுத்தினர். மர
ணத்திற்கான காரணம் தெரியவராத
நிலையில் உடற்கூற்று மாதிரிகள்
கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட
உள்ளன. (அ)

## உயிரிழந்த...

வந்தது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி
நேற்று உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரணம்
விசாரணைகளை திடீர் மரண விசா
ரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம்
மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்
பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.
மரணத்திற்க்கான காரணம் தெரிய
வராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள்
கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட
உள்ளன. (அ-05)

## தியாகதீபம்...

அதனை தொடர்ந்து தியாக தீபத்தின்
உருவ படத்திற்கு மலர் மாலை அணி
வித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்
பட்டது.

அதேவேளை சம நேரத்தில் நல்லூர்
வடக்கு வீதியில் திலீபன் உண்ணாவிர
தம் இருந்த இடத்திலும் அஞ்சலி
செலுத்தப்பட்டது.

அத்துடன் தூக்குக் காவடியொன்று
நினைவிடத்திற்கு வந்ததுடன் , யாழ்ப்
பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்
தும் ஊர்திப் பவனிகள் வந்திருந்தன.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில்
புதிதாக திட்டமிடப்படும் சிங்களக்
குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த
வேண்டும், சிறைகளிலும், முகாம்களி
லும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்
அரசியற் கைதிகள் விடுதலை செய்யப்
பட வேண்டும், அவசரகாலச் சட்டம்
முழுமையாக நீக்கப்பட வேண்டும்,
ஊர்காவல் படையினருக்கு வழங்கப்
பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களை
யப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்
களில் புதிதாக பொலிஸ் நிலையங்க
ளைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும்
நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட
வேண்டும் என ஐந்து அம்ச கோரிக்கை
களை முன்வைத்து, தியாகதீபம் திலீபன்
15.09.1987 தொடக்கம் 26.09.1987
வரையான 12 நாட்கள் அகிம்சை வழி
யில் நல்லூரில் நீராகாரம் கூட அருந்தா
மல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி
சாவைத் தழுவிக்கொண்டார். (அ)

## இராணுவ...

வவுனியா கந்தசாமி ஆலயத்தில் நேற்று
காலை இடம்பெற்றன.

குறித்த நிகழ்வில் இலங்கை இராணு
வத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல்
லசந்த ரொட்றிக்கோ கலந்து கொண்டி
ருந்தார்.

குறித்த நிகழ்வு பற்றி செய்தி சேகரிப்
பதற்காக வவுனியா பிராந்திய ஊடகவிய
லாளர்கள் அங்கு சென்றிருந்தனர்.
இருப்பினும் அவர்கள் செய்தி சேகரிப்
பதற்கு இராணுவ அதிகாரிகளால்
அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இராணுவத்தின் ஊடகப் பிரிவிற்கு
மாத்திரம் செய்தி சேகரிப்பதற்கான
அனுமதி வழங்கப்பட்டிருந்தது. (அ)

## இலங்கை...

இடம்பெற்றது.

இலங்கையின் புதிய பொருளாதார
சீர்திருத்த செயல்முறையின் முன்னேற்
றம், இலங்கையை பொருளாதார
ரீதியாகவும், சமூக ரீதியாகவும், அரசியல்
ரீதியாகவும் புதிய தளத்திற்கு உயர்த்து
வதற்காக அரசாங்கம் தற்போது செயல்
படுத்தி வரும் செயல்திட்டங்கள்
குறித்தும் ஜனாதிபதி ஐ.நா. பொதுச்
செயலாளரிடம் விளக்கினார்.

இலங்கை அரசாங்கத்தின் புதிய
முற்போக்கான செயல்திட்டத்திற்கு
ஐக்கிய நாடுகள் சபை முன்னிற்பதா
கவும், முழு ஆதரவையும் தெரிவிப்பதா
கவும் ஐ.நா. பொதுச்செயலாளர் இதன்
போது குறிப்பிட்டார். (அ)

## மண்டைதீவு...

ஈடுபட்டவேளை குறித்த இளைஞன்
களங்கண்டித் தடியை பிடித்துக்
கொண்டு மயக்க நிலையில் இருந்ததை
அவதானித்தார்.

பின்னர் குறித்த இளைஞனை படகில்
ஏற்றிக்கொண்டு குருநகர் இறங்கு
துறைக்கு வந்து அங்கிருந்து யாழ்.
போதனா வைத்தியசாலைக்கு கொண்டு
சென்று சிறிது நேரத்தில் குறித்த இளை
ஞன் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண
விசாரணைகளை திடீர் மரண விசா
ரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம்
மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்
பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.
நீரில் மூழ்கியதால் மரணம் சம்பவித்துள்
ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில்
தெரியவந்துள்ளது. (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 2026இற்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு!

கொழும்பு, செப். 27

2026 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொழில் துறை அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு எனப்படும் நிதியமைச்சர் என்ற முறையில் வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளை உள்ளடக்கிய ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்ட உரை நவம்பர் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 8 முதல் நவம்பர் 14 வரை 6 நாட்களுக்கு நடைபெறவுள்ளதுடன், இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு அன்று மாலை 6:00 மணிக்கு நடைபெறும்.

வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு அல்லது குழுநிலை விவாதம் நவம்பர் 15 முதல் டிசம்பர் 5 ஆம் திகதி வரை 17 நாட்களுக்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், வரவு செலவுத் திட்ட மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 5 ஆம் திகதி மாலை 6:00 மணிக்கு நடைபெறும் என்றும் பாராளுமன்றம் தெரிவித்துள்ளது. (ஐ)

## போதைப்பொருட்களுடன் 3,403 பேர் கைதாகினர்!

கொழும்பு, செப். 27

கடந்த 19ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட நடவடிக்கைகளில் போதைப்பொருட்களுடன் 3 ஆயிரத்து 403 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தனர், விசேட அதிரடிப் படையினர், கடற்படையினரால் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது, ஹெரோயினுடன் 1,150 பேரும் ஐஸ் போதைப்பொருளுடன் 1,139 பேரும் குஷ் போதைப் பொருளுடன் 31 பேரும் கஞ்சாவுடன் 982 பேரும் கஞ்சா செடிகளுடன் 31 பேரும் போதை மாத்திரைகளுடன் 70 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 286 கிலோ 162 கிராம் 442 மில்லி கிராம் ஹெரோயின், 423 கிலோ 994 கிராம் 116 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 135 கிராம் 960 மில்லிகிராம் குஷ் போதைப்பொருள், 113 கிலோ 835 கிராம் 360 மில்லிகிராம் கஞ்சா, 91 ஆயிரத்து 662 கஞ்சா செடிகள், 5 ஆயிரத்து 259 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## விடுதலை புலிகள் இயக்கத்தை சேர்ந்தவரின் உத்தரவுப்படியே பணத்தை மாற்றினேன்!

**இந்தியாவில் கைதான பெண் வாக்குமூலம்**

சென்னை, செப். 27

புலிகள் அமைப்பை சேர்ந்த நபர் ஒருவரின் கட்டளைப்படியே மும்பையில் உள்ள வங்கிக் கணக்கு ஒன்றிலிருந்து, அந்த அமைப்பினருக்கு 42 கோடி ரூபாயை (இலங்கை மதிப்பில் சுமார் 144 கோடி ரூபாய்) மாற்ற முயன்றதாக சட்டவிரோத பணப் பரிமாற்ற வழக்கில் கைதான இலங்கை பெண் ஒருவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இலங்கையில் இருந்து சுற்றுலா வீசாவில், 2019 ஆம் ஆண்டில் சென்னைக்கு சென்ற பெண்ணொருவரே இந்த சம்பவம் தொடர்பில் முன்னதாக கைது செய்யப்பட்டார்.

புலிகள் அமைப்புடன் தொடர்புடைய பணச்சலவை வழக்கில், அந்த பெண்ணை விசாரிக்க அமுலாக்கத்துறைக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியதையடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த பெண்ணை விசாரணைக்கு உட்படுத்த சென்னையில் உள்ள விசேட தேசிய புலனாய்வு முகவரக நீதிமன்றம் அமுலாக்க துறைக்கு முன்னதாக அனுமதியளித்தது.

இரண்டு நாட்கள் சிறையில் வைத்து அவரை விசாரித்ததன் அடிப்படையில் புலிகள் அமைப்பினருக்கு 42 கோடி ரூபாயை மாற்ற முயன்றதாகக் குறித்த பெண் வாக்குமூலம் அளித்துள்ளார். (ஐ)

## பீடி இலைகள், இரசாயனங்கள் மன்னாரில் கைப்பற்றப்பட்டன

மன்னார், செப். 27

நாட்டுக்குள் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட பீடி இலைகள் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் - துங்கல்டிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் பொலிஸ் நிலைய அதிகாரிகளால், வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, 835 கிலோ 800 கிராம் நிறையுடைய பீடி இலைகள் , 635 கிலோ 600 கிராம் நிறையுடைய பல்வேறு வகையான விவசாய இரசாயனங்கள் மற்றும் 03 படகு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை துங்கல்கட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சபாநாயகருக்கு எதிராக வரும் நம்பிக்கையில்லா பிரேரணை!

**சபையில் அறிவித்தது எதிர்க்கட்சி**

கொழும்பு, செப். 27

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே இதனைக் குறிப்பிட்டார்.

தற்போதைய சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன சபாநாயகர் பதவியை வகிக்க தகுதியற்றவர் என்று அவர் கூறினார்.

சபாநாயகர் காரணங்களை தெரிவிக்காமல் பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிராகரித்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா மேலும் தெரிவித்தார். (அ)

## நாமலுக்கு எதிரான வழக்கு டிசெம்பருக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 27

கிரிஷ் பரிவர்த்தனை தொடர்பாக முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஸவுக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த வழக்கில் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு அறிக்கையை வரவழைக்க நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று அதன் பதிவாளருக்கு உத்தரவிட்டது. அத்துடன், இந்த வழக்கை டிசெம்பர் மாதத்துக்கு ஒத்தி வைத்தது.

இந்த வழக்கு நேற்றைய தினம் கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர் நதி அபர்ணா முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது. பிரதிவாதி நாமல் ராஜபக்ஷ நீதிமன்றத்தில் முற்பட்டிருந்தார்.

பிரதிவாதி சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ், பிரதிவாதி கோரிய சில ஆவணங்கள் இன்னும் அரசு தரப்பு தனக்கு வழங்கப்படவில்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த அரசு தரப்பு சார்பில் ஆஜரான துணை சொலிசிட்டர் ஜெனரல் வசந்த பெரேரா, பிரதிவாதி கோரிய பெரும்பாலான ஆவணங்கள் ஏற்கனவே அவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டன என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

பிரதிவாதிகள் இதுவரை பெறாத ஆவணங்கள் குற்றவியல் புலனாய்வுத்துறையிடம் கோரப்படும் என்றும் வழங்கக்கூடிய ஆவணங்கள் உடனடியாக வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இந்த நேரத்தில், பிரதிவாதிகள் கோரிய ஆவணங்களை மறுநாள் உடனடியாக அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதியரசர் கூறினார்.

பின்னர் வழக்கை டிசெம்பர் 18ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாட்டில் ரக்பி விளையாட்டை ஊக்குவிப்பதற்காக இந்திய நிறுவனமான கிரிஷிடமிருந்து 7 கோடி ரூபாய் பணத்தைப் பெற்று பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தைச் செய்ததாகக் கூறி, சட்டமா அதிபர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். (ஐ)

## சிங்கப்பூரில் தமிழர் ஒருவருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றம்

சிங்கப்பூர், செப். 27

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் மலேசிய தமிழரான தட்சிணாமூர்த்தி காத்தையாவுக்கு நேற்று முன்தினம்மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

போதைப் பொருள் குற்றத்துக்காகவே அவருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. அங்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுவது, கடந்த சில ஆண்டுகளில் இது மூன்றாவது முறை என்பது குறிப்பிடத்தக்கது.

தட்சிணாமூர்த்தி காத்தையா 45 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சிங்கப்பூரில் கடந்த 2011ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

சிங்கப்பூர் சட்டப்படி, 15 கிராமுக்கு மேல் ஹெரோயினுடன் ஒருவர் பிடிபட்டாலே அவருக்கு மரண தண்டனை விதிக்க முடியும். இதன்படி, தட்சிணாமூர்த்தி காத்தையாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அந்தத் தண்டனை கடந்த 2022 ஆம் ஆண்டே நிறைவேற்றப்படுவதாக இருந்தது. இருந்தாலும், மேன்முறையீடு காரணமாக அது நிறுத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், தூக்கு தண்டனைக்கு எதிரான தட்சிணாமூர்த்தி காத்தையாவின் மேல்முறையீட்டு மனுவை நீதிமன்றம் கடந்த ஒகஸ்ட் மாதம் தள்ளுபடி செய்ததைத் தொடர்ந்து, அவர் தற்போது தூக்கிலிடப்பட்டுள்ளார்.

இவருடன் சேர்த்து, போதைப் பொருள் குற்றத்துக்காக இந்த ஆண்டு மட்டும் சிங்கப்பூரில் 11 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூரின் இந்த நடவடிக்கைக்கு மனித உரிமைகள் அமைப்புகள் பலவும் கண்டனம் தெரிவித்துள்ளன.

## 16.7 இலட்சம் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்

கொழும்பு, செப். 27

நடப்பு ஆண்டில் கடந்த 17ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 16 இலட்சத்து 78 ஆயிரத்து 346 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதில், அதிகளவான சுற்றுலா பயணிகள் 3 இலட்சத்து 58 ஆயிரத்து 165 பேர் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர்.

அத்துடன், ஐக்கிய இராச்சியத்திலிருந்து ஒரு இலட்சத்து 59 ஆயிரத்து 162 பேரும் ரஷ்யாவிலிருந்து ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 116 பேரும் ஜேர்மனியிலிருந்து ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 638 பேரும் சீனாவிலிருந்து 97 ஆயிரத்து 379 பேரும் பிரான்ஸிலிருந்து 86 ஆயிரத்து 877 பேரும் அவுஸ்திரேலியாவிலிருந்து 74 ஆயிரத்து 372 பேரும் நெதர்லாந்திலிருந்து 51 ஆயிரத்து 226 பேரும் வருகை தந்துள்ளனர்.

இதேசமயம், இந்த மாதத்தின் முதல் 21 நாட்களில் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 823 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (ஐ)

## மாணவர்களை ஏற்றிச்செல்லும் பேருந்துகள், வான்கள் சோதனை

கொழும்பு, செப். 27

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் பேருந்துகள் மற்றும் வான்களை நேற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

நாடளாவிய ரீதியில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சிறுவர் தின தேசிய வாரத்தை முன்னிட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் பேருந்துகள், வான்கள் மூலம் சிறந்த சேவை வழங்கப்படுவதை நோக்காகக் கொண்டு இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர் நாமல் சுதர்ஷன தெரிவித்துள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org